தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

மாசி 23, தாரண – திருவள்ளுவர் ஆண்டு 2036

2005 மார்ச் 7, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் **திரு. அ. அருணாசலம்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:

"இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு."

வாக்கில் இனிமையும், பிறருக்கு வழங்கிக் காத்திடும் தன்மையும் கொண்டவருக்கு இவ்வையகமே வசப்படும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 81, திருமதி மல்லிகா சின்னசாமி, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

81—

பேருந்து வசதி

***29629—திருமதி மல்லிகா சின்னசாமி:**

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து புத்தனாம்பட்டி வரை வந்து செல்லக்கூடிய தடம் எண் *36, 36-பி, 27-சி* நகரப் பேருந்துகள் அருகிலுள்ள அபினிமங்கலம் வரை வந்துபோக அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) அதன் விவரம் என்ன?

[2005 மார்ச் 7

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், கும்பகோணம் கோட்டம், திருச்சி மண்டலம்மூலம் அபினிமங்கலம் கிராமம் ஏற்கெனவே பேருந்து வசதி பெற்றுள்ளது. மேலும், சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து ஓமாந்தூர், அபினிமங்கலம் வழியாக புத்தனாம்பட்டிக்கு 27-7-2004 முதல் தடம் எண் 27-சி நகரப் பேருந்துமூலம் ஆறு நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி மல்லிகா சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர், தமிழகத்தின் காவல் தெய்வம், என்னை வாழ வைத்த புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொன்மலர்ப் பாதம் தொட்டு வணங்குகின்றேன். திருச்சி மாவட்டம், முசிறி தொகுதி, முசிறி ஒன்றியத்தில் அமைந்துள்ளது அபினிமங்கலம் கிராமம் ஆகும். இங்கு சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இக்கிராமப் பொது மக்கள் மற்றும் திருச்சி சென்று பள்ளி மற்றும் கல்லூரிகளில் கல்வி பயிலும் மாணவ, மாணவியர்கள் நகரப் பேருந்து வசதி வேண்டுமெனக் கோரிக்கை வைத்தனர். அம்மனுவின் அடிப்படையில், பொது மக்கள் நலன் கருதியும், ஏழையெளிய அடித்தளத்துக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் குறைந்த செலவில் திருச்சி சென்று வர, திருச்சி சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து மண்ணச்சநல்லூர், திருவல்லரை, ஓமாந்தூர் வழியாக புத்தனாம்பட்டி வரை இயக்கப்பட்டு வந்த தடம் எண் 27-சி பேருந்தை, மிகவும் அருகில் உள்ள அபினிமங்கலம் வரை நீட்டித்து இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்ற வினாவிற்கு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்' என்ற சொல்லிற்கு இலக்கணமாக, அப்பகுதி மக்களின், மாணவ, மாணவிகளின் கல்வி நலன் கருதி, நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு அம்மா அவர்களின் ஆணைப்படி, கடந்த 27-07-2004 அன்று முதல் நகரப் பேருந்து புத்தனாம்பட்டியிலிருந்து அபினிமங்கலம் வரை நீட்டித்து இயக்கப்பட்டு வருகிறது என்ற அமைச்சரின் பதிலுக்கு, மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் முசிறி தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் கோடானு கோடி நெஞ்சார்ந்த நன்றியினை மாண்புமிகு அம்மா அவர்களின் பொன்மலர்ப் பாதங்களில் சமர்ப்பணம் செய்கிறேன். மேலும், பொது மக்களின் வசதிக்காகவும்,

2005 மார்ச் 7]

நெரிசலைக் குறைப்பதற்காகவும், காலை 9-30 மணிக்கும், பகல் 2-30 மணிக்கும் சத்திரம் பேருந்து நிலையத்திலிருந்து அபினிமங்கலம் வரை இரண்டு நடைகள் இயக்கிட அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி மல்லிகா சின்னசாமி அவர்களுடைய வேண்டுகோளை ஏற்றுத்தான், புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஒப்புதலைப் பெற்று, அந்த வழித்தடத்தில் 27-சி நகரப் பேருந்துமூலமாக அபினிமங்கலம் வரை புதிய வழித்தடத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டிருக்கிறது. அது 27-7-2004 முதல் ஓடிக்கொண்டிருக்கிறது. அது ஆறு நடைகள் இயக்கப்பட்டு வருகிறது. இருந்தாலும்கூட, காலை நேரத்திலும், மதிய நேரத்திலும் கூடுதலாக இரண்டு நடைகள் இயக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிவுடன் பரிசீலித்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: திரு. சி. சிவசாமி.

திரு. சி. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பூரினுடைய வடக்குப் பகுதியில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய நல்லாசியால் புதிய பின்னலாடைத் தொழில் பூங்கா தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் தொழில் பூங்காவில் 25 ஆயிரம் தொழிலாளர்களுக்குமேல் வேலை செய்கின்ற வாய்ப்பிருக்கின்றது. அந்தப் பகுதிக்குத் தொழிலாளர்கள் எல்லாம் சென்று வருவதற்குரிய போக்குவரத்து வசதி இல்லாத காரணத்தினால், புதியதாகத் தொடங்கப்பட்டிருக்கின்ற, திருப்பூரில் அமைந்திருக்கக்கூடிய பின்னலாடைத் தொழில் பூங்காவிற்கு, தொழிலாளர்களுடைய வசதிக்காகப் புதிய பேருந்துகளை இயக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-05

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இதற்கும் தொடர்பு இல்லையென்றாலும்கூட நான் அதற்குப் பதிலளிக்க விரும்புகிறேன். அந்தப் பகுதியிலே மாண்புமிகு உறுப்பினர் சிவசாமி அவர்களுடைய

கோரிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆய்வு செய்து, உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் 82, திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

82—

வேளாண்மைக் கல்லூரி

***23305—திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பத்மநாபபுரம் தொகுதி, பத்மநாபபுரம் கோட்டை வளாகத்தில் காலியாக இருக்கும் நிலத்தில் ஒரு வேளாண்மைக் கல்லூரி அமைக்க அரசு பரிசீலிக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குமரி மாவட்ட மக்களின் நீண்ட காலக் கோரிக்கையான மருத்துவக் கல்லூரியை அமைத்துத் தந்த மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில், குமரி மாவட்ட மக்கள் பயனடையும் வகையில் ஒரு வேளாண்மைக் கல்லூரி தேவை என்பது பொது மக்களின் நீண்ட காலக் கோரிக்கையாகும். தமிழகத்தில் அனைத்து இயற்கை வளங்களும் நிறைந்த குமரி மாவட்டத்தில் விவசாய மக்களின் அத்தியாவசியத் தேவையான வேளாண்மைக் கல்லூரியை நடப்பு ஆண்டிலாவது அமைத்துத்தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை மேற்கொள்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.